170

8 APR 1910
MADURA

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
18 APR 1910
MADRAS

உ

முருகன் றுணை.

# பரங்கிரிப்பதிற்றுப்பத்தந்தாதி.

170
1910

மதுரை ஸ்ரீ ஞானசம்பந்தஸ்வாமிகள் ஆதீனவித்வானும்
செயின்ட்மேரிஸ் ஹைஸ்கூல் உபாத்தியாயரும்
தமிழ்ப்பண்டிதரும்
மதுரை காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ
பா. சுப்பிரமணியஐயரவர்கள் மாணாக்கருமான

## மு. கோவிந்தசாமிஐயரால்

இயற்றப்பெற்று

---

திருவேட்டநல்லூர் ஜமீன்தார்
மகா-௱-௱-ஸ்ரீ ஸ்ரீமான்

## கனகசபாபதி செட்டியாரவர்கள்

பேருதவியால்

மதுரை வடக்குமாசிவீதி:
...ந்திர விலாச அச்சியந்திர சாலையிற்
...ப்பிக்கப்பெற்றது.

---

1910.

Q26
N10
223173

894.8111
1355

உ

முருகன்றுணை.

# பரங்கிரிப்பதிற்றுப்பத்தந்தாதி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
18 APR 1910
MADRAS

மதுரை ஸ்ரீ ஞானசம்பந்தஸ்வாமிகள் ஆதீனவித்வானும்
செயின்ட்மேரிஸ் ஹைஸ்கூல் உபாத்தியாயரும்
தமிழ்ப்பண்டிதரும்
மதுரை காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ
பா. சுப்பராமஐயரவர்கள் மாணாக்கருமான

## மு. கோவிந்தசாமிஐயரால்

இயற்றப்பெற்று

---

திருவேட்டநல்லூர் ஜமீன்தார்
மகா-௱-௱-ஸ்ரீ ஸ்ரீமான்

## கனகசபாபதி செட்டியாரவர்கள்

பேருதவியால்

மதுரை வடக்குமாசிவீதி:
ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1910.

Q 26

210

ஆவணக்காப்பக

223173

உ

முருகன் துணை.

# பரங்கிரிப்பதிற்றுப் பத்தந்தாதி,

## முகவுரை.

---

"வேறு வேறு நின்றுலகெலாமளிப்பதுவெஃகி யாறு மாமுகம் பன்னிரு செங்கைகொண்டமரு" வோனாகிய நம்மிறைவனுடைய திருப்படை வீடுகளாறனுள் முற்பட்டதாகிய திருப்பரங்குன்றத்திலே வீற்றிருந்தருளும் ஞானபண்டிதனென்னும் திருநாமமுடைய அவ்வறுமுகக்கடவுள்மீது மதுரைவாசிபிர்ம்ம - ஸ்ரீ முத்துச்சுப்பிரமணிய ஐயரவர்கள் குமாரர் கோவிந்தசாமி ஐயரவர்கள் அன்புமீதூர்ந்து பாடிய பதிற்றுப்பத்தந்தாதி யென்னும் பெயர்த்தாகிய இவ்வற்புதப் பிரபந்தத்தைப்பாவலர்க்கெளிவரும் பரங்கருணைத்திடங் கடலாகிய அந்த ஞானபண்டிதமூர்த்தி தமக்கோர்மாலையாவென்று அணிந்தருளுவர் என்பதற்குச் சிறிதுஞ்சந்தேகமில்லை என்று நிச்சயமாய் நம்புகின்றேன்.

---

11—2—1910 } தில்லைநாதநாவலர்,
மதுரை. } யாழ்ப்பாணம்.

முருகன் துணை.

# சாத்துக்கவிகள்.

நூலாசிரியர் ஆசிரியரும் மதுரைக் காலேஜ்
தமிழ்ப்பண்டிதருமான மகா-ள-ள-ஸ்ரீ

## பா. சுப்பராமஐயரவர்கள் சொல்லியது.

தந்தைதொழில் மகனாற்று மென்றான்றோர்
சாற்றுமொழி தவிராமற் சகத்தோர்கூறும்
நிந்தைகொளுஞ் சூர்முதல நேராரைக்
கொன்றொழித்த நெடுவேலோ னினைக்குமன்பர்
பந்தவினை யகற்றவரு பராசலத்துப்
பதிற்றுப்பத்தந்தாதி பகர்ந்தான் சீர்கோ
விந்தசாமி யெனுமறையோன் பாவலர்க
ளகஞ்செவிகண் விரும்பியுணும் விருந்தாய்மன்னோ.

---

நூலாசிரியர் மாமனும் சங்கிரகராமாயண
நூலாசிரியருமான மகா-ள-ள-ஸ்ரீ

## நாராயணசாமிஐயரவர்கள் சொல்லியது.

நேரிசை வெண்பா.

சீர்பரவுங் கந்தகிரிச் சேவகன்றாண் மாலையெனப்
பார்பரவ வந்தாதி பாடினான்—ஏர்பரவும்
வண்டமிழே வீசுபழ மாமதுரை நாதனருள்
கொண்டகோ விந்தசாமிக்கோ.

மதுரை காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்
வித்யாபாநு பத்திராதிபருமான மகா-m-m-ஸ்ரீ

## ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் சொல்லியது.

மாறுபடு மதங்களென மதிக்கப் பெற்ற
மதங்களைத்தம் மாமதியா லொருமையாக்கி
வீறுபெறு வித்தகசங் கரனார் தம்மின்
வியன்சரித மாதியபன் னூலைச் செய்யும்
பேறுபெறு வித்துவகோ விந்த சாமிப்
பேராள னேங்குபரா சலத்தில் வாழு
மாறுமுக வேள்புயத்திற் பதிற்றுப் பத்துந்
தாதிரறுந் தொடை புனைந்தா னன்பான்மன்னே.

உ

முருகன்றுணை.

# தற்சிறப்புப்பாயிரம்.

## நேரிசை யாசிரியப்பா.

திருமகள் மகிழ்ந்து திகழ்ந்திடு மார்பன்
மருமலர் வாழ்தரு மறையவ னிருவ
ரடிமுடி நேடியன் றளப்பரி தாயதேங்
கடிகமழ் தருபூங் கடுக்கையெம் பெருமான்
பெட்புறு கயற்கட் பிடியைமுன் மணந்து
நட்புறு கோன்முறை நடாத்துதென் பாண்டி
நாடெனு மகட்கு நலங்கிளர் முகமெனப்
பீடமைந் தோங்குசீர் பெற்றிடு மதுரை
நன்னகர்த் தெருவே நவமணி விலையைப்
பன்னுதற் பொருட்டெம் பரமனார் வந்த
அளகைய னொப்ப வளவரு மாக்கமும்
வளமையுங் கொண்ட வணிகரின் குலத்தின்
மணியென விளங்கு மணிராமலிங்க
வணிகர்தங் கோமான் மாண்புடன் புரிந்த
நற்றவப் பயனா னானிலத் துதித்தோன்
கொற்றவர் மொழியாய்க் குயிற்றுமாங் கிலமுங்
கண்டினு மினிய வண்டமிழ்ச் சொல்லு
மெம்முடன் படித்தோ னிணைபிரி யாது
கைம்மலர் கோத்துக் கவின்முகங் காட்டி

யின்சொற் சொல்லி யிதயமு மொத்தே
யென்சொல் லேற்கு மினியநன் னண்ப
னருந்தமிழ் முனிவரன் றிருந்திய கரகத்
திருந்துநல் வளங்கொள் பெருந்தகைப் பொருனை
யாறுபாய் நெல்லை யம்பதி யடுத்துப்
பேறுக ளளிக்கும் பெருபுனற் பொய்கையுந்
திருமக ளன்பாய்ச் செய்தவத் துகந்து
கருமுகில் வண்ணன் கமலையை வேட்ட
சீருமே பெற்ற திருவேட்ட நல்லூர்
பேருறுஞ் சமீனைப் பெட்புடன் புரப்போ
னில்லையென் றிரப்போர்க் கிலையெனாதுவந்து
வல்லையே யளிக்கு மழைநிகர் கையன்
புலவரின் றுயர்களைப் போக்குதற் குற்ற
விலகுகற் பகமா யியைந்தவ னல்ல
சிவனடி யாரைச் சிவனெனப் பேணுந்
தவமிக வுடையான் சற்குண வள்ளல்
கனகவிற் கையன் கனைகழல் துதிப்போன்
கனகசபாபதி கனப்பெயர் கொண்டோ
னும்பர்நட் டிமையோ ருவப்பினோ டிமையா
திம்பர்நாட் டஞ்செலுத் தெழின்மலர்ப் பொழிறொறு
மஞ்சினம் பரவ மயிலினங் கண்டுத
மஞ்சிறை விரித்தாங் கணிநடம் புரியுங்
கந்தமா கிரிவாழ் கந்தன் மீது
செந்தமிழ் மாலை செப்பிடு மென்ன
வுற்றதோ ருரிமையா லுரைக்கப்
பற்றியே யன்பாய்ப் பகர்ந்தன மிதுவே.

# பிழை திருத்தம்.

| பாட்டு | பிழை | திருத்தம். |
| --- | --- | --- |
| 21 | குரத்தி | குறத்தி |
| 24 | தேவனே | தெவனே |
| 28 | பழமொடு | பழமோடு |
| 37 | வருத்தவ | வருத்துவ |
| 40 | வானர் | வானவர் |
| 58 | கண்ணுடையக் | கண்ணுடைக் |
| ,, | ாவிற் | காவிற் |

உ

முருகன் துணை.

# பரங்கிரிப் பதிற்றுப் பத்தந்தாதி.

## காப்பு.

நேரிசை வெண்பா.

செய்யவயல் சூழுந் திருப்பரங்குன் றாறுமுகத்
தையன் பதிற்றுப்பத் தந்தாதி—செய்யவருள்
எந்தா வளவண்ணு வீரிரண்டோ டொன்றுகரத்
தந்தா வளவண்ணு ரு.

## நூல்.

திருவுறை மார்பன் மற்றுஞ் செழுமலர்க் கிழவன் வானோர்
மருவிய விடுக்கண் போக்க மங்கையோர் பாக னீன்ற
வருளொரு வடிவாய் வந்து பரங்கிரி யமர்ந்து தேவ
தருநிழல் வாழ்வோன் பெற்ற தையலை மணந்தாய் போற்றி.

போற்றியீ ராறு நாட்டம் பொற்புறு முகமோ ராறு
போற்றிநீ றிட்ட நெற்றி புயல்தனை யிட்ட செங்கை
போற்றிநீ டொளிவேல் சாந்து பொலிதரு மார்பு வேதம்
போற்றியே யொலிக்கும் பாத பங்கயம் போற்றி நாதா. (2)

தாகவெம் பசிய டக்கித் தலமெலாஞ் சென்றி றைஞ்சி
மாகன கத்தின் றானம் வழங்கிருன் னீசி லாடி

யோகமும் புரிவீர் நீங்க ளொருமுறை பரங்குன் றத்தி
னேகநா யகனைக் காணி லெய்துவீ ரெல்லாப் பேறும். (3)

பேயொடு வன்கண் பூத பேதள மிவையா னேரு
நோயொடு மற்றுந் துன்ப நூறுள வேனுந் தந்தை
தாயினுஞ் சிறந்த வண்ணல் பரங்கிரிச் சண்மு கத்தை
வாயினால் வாழ்த்த வன்றே யகன்றிடு மாட்சி யுண்டாம். (4)

உண்டுடுத் துறங்கிக் கால மொழிந்திட வவமே போக்கு
மண்டலத் தோரே வம்மின் மாதவன் மருகன் வாழும்
விண்டொடத் தேவகங்கை விளங்கிடும் பராச லத்தைக்
கண்டுநற் பயனைக் கொள்வோந் தீவினை கழிப்போ மின்றே.5

இன்றிருப் பார்க ணாளைக் கிருப்பரென் றெண்ண வொண்ணா
பொன்றுமித் தனுவை நன்கு பொருந்திடும் பொழுதே தேனார்
கொன்றையஞ் சடையான் றந்த குருபரன் பரங்குன் றத்தைச்
சென்றுநாம் வலஞ்செய் தேத்தித் திருவருட் சித்திகொள்வாம்

கொடியவ னேனு மென்னை யடியவர் கூட்டஞ் சேர்த்தென்
மிடியதை யகற்றி யென்னா விரைமலர்த் தாளைப் பாடி
யிடையறா திருக்கும் வண்ண மின்னருள் சுரந்து கீரற்
குடையதோர் பதமெ னக்கும் பராசலா வுதவு வாயே. (7)

வாவிகள் சூழ்ந்த கந்தன் மலையினை நண்ணி யின்னே
சேவியா திருந்தா லாவி தேகம்விட் டகலுங் காலை
கூவிபா ரழைத்து நிற்கக் கூறுவர் மனனே யானைத்
தேவியா ருடனே வாழுஞ் செம்மலை யுன்னாய் நாளும். (8)

நாயினுங் கடையே னென்று நங்கையர் கலவி யின்ப
மேயின னதுவே வீடா வெண்ணினா னொந்து போனே
னுயரின் மனைவளர்ந்த வச்சுதன் மருகா விண்ணோர்
வேயமர் பரங்குன் றண்ணு விமலனே யாட்கொள் ளாயே(9)

ஆபரி னுதரந் தங்கி யாயிரம் பிறப்பெ டுத்து
மாயமாங் குடும்ப மென்னும் வாரிவீழ்ந் தெய்த்தே னந்தோ
மாயவ னுந்தி பூத்த மலரவன் றலைபு டைத்த
நாயக தாண்மி தட்பை நல்கிடாய் கரையே றற்கே (10)

OFFICE OF THE REGISTRAR OF BO
REGISTERED
18 APR 1910
MADRAS.

வே று.

கேள்வியொரு சிறிதுமில னாகமநூ
லறியகில்லேன் கிளரும் வன்னி
வேள்விவகை புரிந்தறியே னின்னடியார்
கூட்டமொடு விரவு கில்லேன்
கோள்வகைகள் பலவிதமாய் நின்றாட்ட
வயர்வுற்றேன் குமரா நின்றன்
ருள்வலியின் றணையன்றி வேறுதுணை
யெனக்கில்லைநின் சரணே புக்கேன். (11)

புரந்தரனின் பெருமையினை யறியாது
கனத்ததொரு பொன்னா ரத்தைப்
பொருந்தியபல் லோர்களினா லெடுத்தரிதாய்க்
கொடுவந்து புயத்திற் சூட்டக்
கரந்திகழும் விரலொன்றால் வாங்கியணி
புக்கிரனே கனிந்து வேண்டும்
வரந்தருமெம் பரங்கிரிவா ழாறுமுகா
சத்தியெனும் வடிவேற் கையா. (12)

ஆறலையுஞ் சடையாற்கு வருக்கரிய
வரும்பொருளை யறியச் சொல்லித்
தேறலையும் வருவித்த பரஞ்சுடரே
தெள்ளமுதே தேனே மஞ்ஞை
மாறலையுங் கரச்சமண வஞ்சகரைக்
கழுவேற்றி மாய்த்து வேந்தை
யேறலையு நாதனன்பு கொளச்செய்த
பரங்குன்றத் தெங்கள் கோவே. (13)

கோவேசெந் தமிழ்மாலை புனைகின்ற
திருப்புபத்த குமரா வேற்கைத்
தேவேசெங் கரும்பிலுறுஞ் சுவைரசமே
காய்ச்சியதிற் றெருண்ட கண்டே
பூவேசெஞ் சந்தனமே யவையுற்ற
நறுமணமே பூத்த நான்கு
மாவேதம் புகலரிய பரம்பொருளே
பராசலனே வாராய் வாராய். (14)

வாராருங் கச்சறவே புடைத்தெழுந்த
தனமாதர் வலையிற் சிக்கிக்
காராருங் கடல்விழியீர் பிறைநுதலீ
ரறற்குழலீர் கன்னி நல்லீர்
பாராயி ரென்னவத்தை மருவியெனைச்
சேருமெனப் பரவி நின்னை
யோராத பெரும்பாவி யாகிவிட்டேன்
பரங்குன்று வோர்கண் பாராய். (15)

பாரிலிருந் தித்தகைத்தாந் துயருழன்று
படுதியெனப் பாறை வெட்டா
யீரிருமா முகத்தவனென் றலையெழுதி
வைத்தானு மிமையோ ரன்பாய்
வாரமுறை வந்திறைஞ்சுங் கந்தகிரி
வேலவருள் வழங்கு வாயே
னீரிலிடு மெழுத்துப்போ லாகாதோ
நின்றிடுமோ நினையுங் காலே. (16)

காவலரின் கடிமனையின் புறங்கடையிற்
சென்றிருந்து காப்போ ரென்றுங்
கேவலமு மடைவதிலை யெனவுலகோர்
கிளத்துமுறை கேட்டி யானு
மாவலுடன் பரங்கிரியுங் குன்றுகளுங்
குவலயமு மமரர் நாடு
மேவியோ டாளுகின்ற கோவெனவாய்ந்
துனதுகடை நின்றுள் ளேனே. (17)

உள்ளவையை யுள்ளபடி யுரையாம
லாயிரம்பொய் யுரைப்பா ரோடுங்
கள்ளினையே மிகவருந்து மீனரோடுங்
கொலையுடனே களவு மற்று
மெள்ளவுறுந் தீவினைகள் புரிவரொடு
மிணைபிரியா திருக்கு மென்னைப்
புள்ளிமயின் மீதேறும் பரங்கிரிவாழ்
குகவேளே புனித னுக்காய். (18)

காயருந்து வார்களுண்டோ கனியிருக்க
 வமுதிருக்கக் காஞ்சி ரங்காய்
வாயருந்து வார்களுண்டோ கங்கைநதி
 மருங்கோட வாய்க்கா லோடிப்
போயருந்து வார்களுண்டோ வத்திறம்போற்
 பரங்கிரிவாழ் புனிதா விங்கு
நீயிருந்து வரமளிக்க மற்றவரைப்
 போய்ப்பழிச்ச னீத மாமோ. (19)

மோனவடி வாய்நின்று முத்திதரு
 முதற்பொருளே மூல மென்று
வானுலகு மிடிபடுமா நின்றரற்று
 கரகிரியை மகிழ்ந்து காத்த
தேனொழுகு துளவமலர்த் தாரணிந்த
 மான்மருகா தித்திப் பார்ந்த
பானலமெய் மணிவாயா பரங்கிரியா
 வேழையெனைப் பரிந்தா ளாயே. (20)

வேறு.

ஏழைக்கு கந்த மேலான நண்ப
 வெனையாளு ஞான குருவே
மாழைக்கு ரத்தி தனைநாடித் தேனு
 மலர்வாயின் றேனும் பருகிப்
பேழைத்த னத்தின் மலைமீதுங்கந்த
 பெருவெற்பு மீது முறைவாய்
பிழைத்த னத்த வெனையாண்டு நின்றருள்
 பிரியாதி ருக்க வருளாய். (21)

அருளேநி றைந்த வீபாறு கண்ணி
லடியேனுங் கொண்ட கவலை
யிருளேக ழிக்க வொருபார்வை பார்க்கி
லெல்லோனைக் கண்ட பனியாய்
மருளேய கன்ற மணிபோல வென்றன்
மனமாகும் வேதச் சிரமார்
பொருளேதெ ளிந்த சுனையாருங் கந்த
பொருப்பாளுங் கற்ப தருவே. (22)

தருவேய டைந்து கொள்ளாத பேறு
தானொன்று முண்டோ வறையீர்
திருவேய டைந்து போகங்கள் பெற்று
சீராக வாழ்ந்து முலகிற்
கருவேர ரிந்து மாயாத வின்பக்
கடலாடச் செய்யும் பகையைப்
பொருவேல னுற்ற பரவெற்பை நண்ணும்
போகாத பாவ மகலும். (21)

அகமேய டைந்த தமிழ்வாணர் மூவ
ரகமேய டக்க வணிக
ரகமேவ ளர்ந்து தமிழ்வாக்க ளித்த
வடல்வீர நித்த வமல
முகமேதி ருப்பி யடியேனைப் பாரா
முகமாயி ருப்ப தேவனே
நகமேலி ருக்கும் பரங்குன்றி ருக்கு
நாகாதி சேனை யதிபா. (24)

பாராள வென்று புவிமீதில் வந்து
பரங்குன்ற மேவு மிறைவா
கூராளுஞ் சத்தி வடிவேல்பி டித்த
குமராகு ழந்தை முருகா
வேராள மான வடியார்க டம்மி
லெளியேனு மாவ னலனோ
வேராளு நின்ற விளையாளின் சேயா
யெனையாண்டு கொள்ளா யினிதே. (25)

தேவாதி தேவன் பரங்குன்றில் வாழுந்
திருநீல கண்டன் சுதனைப்
பூவாதி கொண்டு முறையாகப் பூசை
புரிவோர்க ளுளு மவனின்
றாவாதி நாம முரைப்போர்க ளே
துகளேய ணிந்து திகழ்வோர்
தாவாத வின்பத் தடமேப டிந்து
சாயுஜ்யப் பேறு பெறுவார். (26)

வாராத துன்ப மிடியாவும் வந்து
வழிதப்பி நிற்கச் செயினுந்
தீராத நோய்கள் பலவாகச் செற்றுச்
சிந்தாகு லத்தைத் தரினு
மோராத போது வொருபோது மில்லை
யுனையன்றி வேறு கதியி
லாராத ரிப்ப வெளியோர்க்கு கந்த
வனையப்ப னான முருகா. (27

முருகேப விழ்க்கு மலர்வாவி யோடை
முத்தேயு திர்க்கும் வளைக
ளருகேவி ளைக்கும் வயலேறி றைந்த
வணிவாய்ந்த கந்த கிரியின்
முருகேயெ னக்குன் னருளேகி டைக்க
மொழிவார்த மக்கு மதுரப்
பெருகேப ழுத்த பழமொடு கண்டு
பெறுமாறு தந்து மகிழ்வேன். (28)

மகமேத ழைத்த புகையேப டர்ந்து
வானேம றைக்கு மெழிலு
மிகவேத ழைக்கும் வளமேகொ ழுத்த
விளைவேய டுத்த குடிகள்
சுகமேத ழைக்கு மதிதோயுஞ் சீதச்
சுனைவாய்ந்த கந்த கிரியா
யகமேம கிழ்ந்தென் வினையேகெ டுத்துன்
னடியேயி ருக்க வருளாய். (29)

அருளேது மின்றி பூபார மான
வரும்பாவி யானும் பரிவாய்ப்
பொருளேதும் வந்த வறியோர்க்க ளித்துப்
புனைபாவ நீக்கி யறியேன்
சுருளேது வண்ட குழன்மாதர் நேசந்
தொலைக்காத மூட னிவையா
மருளேது டைக்க மருந்தாகு முன்றன்
மலர்த்தாள்க ளன்றி பிறவில். (30)

வேறு.

பிறையொடு கங்கை கடியவிழ் கொன்றை
பிறங்கிய சடைமுடி தரித்த
கறையுறு காள கண்டனார் நுதற்கண்
கனலிருந் துதித்ததோர் தகையா
விறையள வேனு மிரங்கிலை போலு
மிரும்பினுங் கொடியதோ நெஞ்ச
முறையிது வாமோ பராசல வென்றன்
மொழிகனின் செவிபட விலையோ. (31)

இலையுறு நீரின் றுளியென யானு
மிதுமுறை யதுமுறை யென்ன
வலையுறு மனமோ டிருந்துமிக் கெய்த்தே
னாணங் கடந்தபூ ரணனே
மலையுறு வலியை யடக்கிட வேலான்
வகிர்படச் செய்தவெம் மரசே
கலையுறு வலியார் வதிந்திடுஞ் செய்ய
கந்தமா கிரியம ரொளியே. (32)

ஒளியுமிழ் மணிக ளழுத்திய வணையி
லுபர்வுட னிருந்தர சாளும்
வளமையுந் தேவ தருநிழ லிருக்கு
மாட்சியு மற்றதும் வேண்டேன்
றெளிதமிழ் மதுரை யம்பதிக் கடுத்த
திருப்பரங் குன்றம ரரசே
யுளமகிழ்ந் தளிக்கு நின்றிரு வருளே
யுவந்திடும் பேறெனக் காகும். (33)

கானமர் மயிலைக் கண்டுவான் கோழி
கவினுட னாடுதல் போலத்
தேனமர் மொழியில் வல்லுநர் மானச்
சிறியனுஞ் செந்தமி ழுரைத்தான்
றுனெனை வெண்ணி மகிழ்ந்திலை யாயின்
பரங்கிரிச் சரவண பவனே
நீநினைந் தளிக்கில் யாருனை வந்து
நில்லெனத் தடைசெயு மவரே. (34)

வரையினை யொத்த மும்மதக் களிற்றின்
மத்தகத் திருப்பவ னிடமே
தரையினி லிருப்போன் சுண்ணமே கேட்குந்
தன்மையை யொத்திடுந் தமியே
னுரையெலா முரைத்து வேண்டுத லெனினு
முயர்வொழித் தின்னருள் புரியாய்
மரையொடு மானார் பொழிலமர் கந்த
மலைவளர் மாதவன் மருகா. (35)

மருமிகுங் கடம்பத் தாரணி தடந்தோள்
வள்ளலே யெனதுள வயலிற்
பரிவெனும் பைங்கூழ் வளர்தர வருளாம்
பனிமழை பொழிந்திடு முகிலே
யருமறைச் சிகரத் தொளிர்மணி விளக்கே
யடியவ ரிருளொழி கதிரே
திருமகள் வாழுந் திருப்பரங் குன்றச்
செல்வயா னுய்யுநா ளெதுவே'. (36)

நாளைவந் துன்னைத் தரிசனஞ் செயலா
நன்றென வெண்ணியா னிருப்பின்
மூளையு மயங்கி மற்றதி லுய்க்கு
மொய்ம்புடன் கொடுந்தொழி லாளன்
வேளையுந் தெரிந்து வருத்தவ னங்கோ
வேண்டினே னின்னரு ளீண்டே
வாளைபாய் தடங்கண் மலிபரங் கிரியில்
வாழறு முகப்பெருந் தகையே. (37)

தகையிலா மனனே பிறப்பெனுங் கடலைத்
தாண்டிடற் கோர்வழி யுரைப்பல்
பகைவரா மைவர் வழிச்செல வொழித்துப்
பராபர னுப்பரங் கிரியில்
வகைவகை யாகப் பாவலர் பாவின்
மாலைகள் சாத்தநன் மகிழ்வின்
மிகையுட னமருஞ் சண்முகன் செய்ய
விரைமலர்த் தாளிணை யுன்னே. (38)

உன்னிட மனனுங் கண்டிடக் கண்ணு
மோதிட வாயுநான் மறைகள்
பன்னிட வரிதாந் திருவடி தன்னைப்
பனிமலர் கொண்டுபூ சிக்க
வென்னிரு கரமு மளித்தருள் செய்த
வெழிற்பரங் கிரியம ரெந்தா
யுன்னரு டனக்குப் பாவியே னன்பா
யுதவுகைம் மாறெதோ வறியேன். (39)

அறிவெனும் விளக்கைக் கொளுத்தியா னேந்தி
யருமறை வானர் முனிவ
ரறிவரி தாகித் திருப்பரங் கிரியி
னைமைந்திடுங் கந்தரத் துள்ளே
செறிகதி ரொளியாய்த் திகழ்ந்திடு மணியைச்
சென்றுளே கண்டன னென்றன்
வறுமையு மகன்று போயது வேறு
மனத்திடை விரும்புவ திலேயே. (40)

வேறு.

ஏது காரணம் பற்றியோ வென்னுரை
யாது நின்செவி கேட்கிலை யின்னுயிர்
மாத ரோடுரை வாழ்த்திநீ யுற்றையோ
மாத வத்தவர் வாழ்பரங் குன்றனே. (41)

குன்ற மேவின மேன்மையுங் கொண்டன
மென்ற காரணம் பற்றியோ வென்னுரை
யொன்றுங் கேட்டிலை கந்தமா வோங்கலார்
வென்றி வேற்கர மேலவர் சூரனே. (42)

சூர பற்பனின் றேந்தக யுத்தத்தி
னேர லாகிய வெப்பினு னீடொளி
யார மஞ்சத்து றங்கிய யர்ந்தையோ
கோரல் கேட்டிலை கந்தமா குன்றுளாய். (43)

கும்ப லாயடி யார்களுங் கூடியே
நம்ப வாழ்த்திடு மோசையா னுன்சொல

லெம்பி ரான்செவி கேட்டிலை போலுமே
தும்பி மொய்பொழில் சூழ்பரங் குன்றுளாய். (44)

ஆய்ந்த றிந்தவ ரன்புடன் செந்தமிழ்
வேய்ந்த வாறிலை யென்னுரை வீணதா
யீந்தி லாய்செவி போலுமே யீகையார்
வாய்ந்த மாபரங் குன்றுள வள்ளலே. (45)

வள்ள லென்றதோர் நாமம் வகித்துநீ
யெள்ள லாகுமோ வென்றனை யென்குறை
தள்ள வேண்டுவ தன்கடன் றண்ணதி
வெள்ள மார்பரங் குன்றுசேர் வேலனே. (46)

வேதி யாவருள் வேலுறை கையனே
சோதி வான்மதி சூடினான் றோன்றலை
மாதி ரத்தவர் வாழ்த்துப ரங்கிரி
நீதி யாதிப நீதுணை யாயிரு. (47)

ஆயு மெல்லைபி லார்கலி சூழ்புவி
நேய மாந்துணை நீயல வேறியார்
தாயின் மேலவ தற்பரா நந்தனே
தூயர் வாழ்பரங் குன்றுள சூரனே. (48)

சூர னீயெனி லென்னுடைத் தொல்பகை
வேர றக்களைந் தைவரை வீழ்த்தியம்
போரு கத்தடி போற்றியா னுற்றிட
வார ருள்புரி யம்பரங் குன்றனே. (49)

குன்று தோறுருந் தாடல் குயிற்றிடுங்
குன்ற வில்லியின் புத்திரா கோவது
கன்றின் மாட்டுறுங் காதலா யென்னிட
மொன்றி யேயருள் செய்பர வோங்கலியய். (50)

கழனி வாய்க்கரும் பொடிதரக் கதிர்மணி சிந்துஞ்
செழுமை யோடன நடையவர் செய்நடத் தோடு
முழவி னோசையு நிறைபரங் குன்றமர் முதலைத்
தொழுது பெற்றன னழிவிலா நித்திய சுகமே. (51)

சுகமென் சொல்லிய ரோடுறை சுந்தர நின்றன்
மகிமை யென்றியா னறிந்திணை மலரடி யடைந்தென்
னகமொ டாக்கையு மொழிகளு மற்பிதஞ் செய்வேன்
ககன மெட்டிய பரங்கிரிக் கண்ணமர் மணியே. (52)

மணியின் காந்தியும் வண்ணமா மலரிடை மணமு
நணிய பான்மையாய்ச் சீவரி னல்லுயிர் நிறைவோ
யணியு மாடமு மரங்குமார் பரங்கிரி யண்ணல்
பணியு மென்குறை நீக்கியுன் பதமலர் சூட்டே. (53)

சூடு பட்டுமே யறிந்திலாப் பேதையான் றொண்டர்
பாடு பட்டுநின் பெருமைகள் பகர்ந்தனர் பலவா
யீடுபட்டவை கேட்டிலே னெந்தையே யருளாய்
கூடன் மாட்டுறுந் திருப்பரங் குன்றமர் குருவே. (54)

குருவின் மாமுறை யிரண்டனுள் பூஜையின் கொள்கை
மருவு மல்லவோ வம்முன்ற யாண்டருள் வழங்காய்
திருவி ழாவரு தெங்குமே மங்கலந் திகழும்
பெருமை யார்பரங் குன்றமர் பித்தனார் சுதனே. (55)

சுருதி மாமுறை நின்றில்ன் ஸ்ரீருத்திரப் பாக்கள்
கருதி யோதிலன் பொறையிலன் காமமிக் குடையேன்
மிருது வார்த்தைக ளறிந்தில னின்னருள் விழைந்தேன்
பொருதி டாதருள் புண்ணியப் பரங்கிரிப் புநிதா. (56)

புனித னுக்குத னிற்கென வரியதோ பொல்லா
மனித ராகிய வமணரைப் புனிதராய் மலர்த்தாட்
கினிய ராக்கினை யல்லவோ வின்னருள் சுரந்தே
முனிவர் வாழ்பரங் கிரியுள மூலனே முருகா. (57)

காவி போன்றொளிர் கண்ணுடையக் கன்னியர் காம
வாவ லற்றவர்க் காயிடும் வீடென வறைந்த
மூவர் மேலவன் புத்திர னுயநீ மொய்த்த
ராவிற் கன்னியை நாடலென் கந்தமா கிரியாய். (58)

கிரியை யாதிய நால்வகை முறைகளைக் கண்டு
புரிய நேர்ந்தில னுகநின் பொன்னடி கொளயா
னுரிய னுவனோ வந்தண ரோதிய மறையின்
பெரிய வோசையே நிறைபரங் குன்றமர் பெரும. (59)

மனமென் யானையைப் புறமத வழியினிற் றடுத்துத்
தினமு முன்னடிக் கன்பொடு தென்றமிழ்ப் பாவின்

வனச மாலைகள் சாத்தநீ மகிழ்ந்தருள் வழங்கிற்
குனியு மங்குச மாயிடும் பரங்கிரிக் குமரா. (60)

வேறு.

மரத்துருவ மாவுருவ மற்றுமுள தாம
சரத்துருவம் பெற்றிடினுஞ் சண்முகநின் செய்ய
சிரத்தையர்கள் வாழ்வுறுந் திருப்பரங்குன் றததிற்
றிருத்தமுடன் வாழ்தரவென் சிந்தைவிழ வாமே. (61)

மேதினியி லுள்ளவர்கண் மேன்மையுறுந் தெய்வஞ்
சோதிவளர் கந்தகிரிக் கந்தனெனச் சொல்வா
ராதலினின் பொற்சர ணடைக்கலம்பு குந்தே
னீதமல வென்றனைக்கை விட்டிடுத னீயே. (62)

நீர்நிலந்தீ காற்றினொடு நீடியதாம் வான
மார்நிலவு செங்கதி ருடுக்களிவை யாவும்
பார்நிலவு பல்பொருளும் பல்லுயிரு மானோன்
சீர்நிலவு கந்தகிரி சித்ரமயில் வீரன். (63)

வீணுரையும் வீண்செயலு மேவுவதா லென்றுந்
தாணுவடி பேணுதலே சற்சனர்கள் செய்கை
தோணிபுரந் தோன்றிபருந் தொன்மறை விரித்த
சேணுயருங் கந்தகிரிச் சேவகனைப் பேணாய். (64)

பேணுறையுந் தீத்தலையும் பீலிகையுங் கொண்டோர்
கானெரிய வந்தவொரு காய்கனலே காணின்
மாணுதரம் வந்தவொரு மானணைவா னீண்டு
வானளவு கந்தகிரி வாழ்வனடி காப்பே. (65)

கானலது நீரெனவே காணுறுதல் போல
வீனமுறுந் தேவரையு மேத்திடுவர் மெய்யாய்
வானுலகின் மண்ணுலகின் மற்றுலகி னின்போ
ஞனறியேன் மெய்ப்பொருளைக் கந்தகிரி நம்ப. (66)

நம்மவரே வாருநம னண்ணுமுனர் போவோ
மும்மையிலு நன்மைதரு மூலபொரு ளான
செம்மலுறை கந்தகிரி செய்தவினை நீக்கி
மும்மலமும் போக்கியநன் முத்தரென வாவோம். (67)

ஆக்கையினைப் பெற்றதனு லாயபய னென்னும்
விக்குகயி றேடியமன் மேவுமுனர் நாளும்
பூக்கைகொடு தாண்மலரைப் பூசைபுரி யேனேற்
றேக்குவளர் கந்தகிரிச் செங்கைவடி வேலோய். (68)

வேலையதி பன்விறலைச் செற்றவடல் வீர
காலையறு போதுனது கஞ்சவடி யேத்த
நூலையதி பாக்கியமா நுட்பமுட னோத
மாலையறு கந்தமலை வள்ளலென தையே. (69)

ஐயமுட னல்லசெய லற்றிலன்வ ருத்தும்
பையிரையைத் தேடுவதிற் பாவியானு ழன்றேன்
செய்யவயல் சூழ்ந்திலகுங் கந்தகிரிச் செல்வா
வுய்யவுன தின்னருளை யோகையுட னீயாய். (70)

வேறு.

ஈராறு தோளழகு மேழைகளைக் காத்தருளு
மோராறு மாமுகத்தி னொள்வடிவு மென்றடியே

னேராக நோக்க நினைந்தெனது முன்வருவாய்
சீராறுஞ் செய்ய திருப்பரங்குன் றாறுமுகா. (71)

காந்தமது வூசியினைக் கண்டிழுக்குந் தன்மையைப்போற்
பாந்தமுட னென்மனமா மூசியைநின் பாதமெனுங்
காந்தமலான் மற்றவைகள் காசினியிற் றானுண்டோ
பூந்தடமார் கந்தகிரிப் புண்ணியமாம் பேரருளே. (72)

பேரும் புகழும் பிறங்கியநல் லோருறவுஞ்
சீரும் புகலரிய சித்திகளு மெய்திடலாங்
காருறைய வோங்கியமா கந்தகிரி யான்பெயரை
நீருரையு மோர்முறையே நீள்புவியீர் சத்தியமாம். (73)

மாமரமீ துள்ளகுயின் முங்கலமாம் வாழ்த்தெடுப்பக்
காமரமீ தூதுங் களிவண்டு வாழ்பொழிலுந்
தாமரையா ரங்குளமுஞ் சார்ந்தபரங் குன்றவனே
நீமறவா தென்னையுமாட் கொண்டருளாய் நின்மலனே. (74)

நேமமொடு நிட்டை நெடிதிருந்து தேனொழுகு
தாமரையின் செய்யதுவாந் தாளிணையைச் சிந்திக்க
மாமருவு மான்மருகா மாண்புடனே வந்தருளாய்
சேமமுறுந் தூயோர் திகழ்கந்த வெற்போனே. (75)

போனேன் பலதலமும் பொன்னீறு வாங்கியிட்டே
னூனே கழிக்கப் பலவிரத முற்றுநின்றே
னானேன் மனமகிழ்ச்சி யாயிலைநின் றாள்கண்டாற்
றானேர் மகிழ்ச்சியைப்போற் கந்தகிரி சற்குருவே. (76)

குருமணியே வேல்பிடித்த கோமணியே யல்லகற்று
மருமணியே கந்தமலை யாளு நவமணியே
கருமணியா மம்மைமடிக் கண்ணமருங் கண்மணியே
பெருமணியே யாண்டும் பிறவா 'வரமருளே. (77)

ஏறிவந்து நின்வாச லென்னரசே வந்துகுறை
கூறிவந்த னங்களையான் கோடியாய்ச் செய்யவுநீ
யாறிவந் தன்பாக வாதரியா தேராமோ
வீறிவந்த கந்தகிரி வெற்றிமயி லாசானே. (78)

ஆசுமுத லாங்கவிதை யாரமெனக் கோத்துனது
தேசமருந் தோளணியச் செந்தமிழை நீயருளே
பாசமென நீளரவப் பல்மணியின் காந்திமிக!
வீசிவெயி லுணச்செய் கந்தகிரி வித்தகனே. (79)

வித்தகனே கந்தகிரி மேலவனே நீயன்றே
வித்தரையி லுள்ளவருக் கின்றமிழி னற்சுவையை
யுத்திவகை யோடுரைத்தா யுன்னருமைத்தென்மொழியைப்
பத்தனெனக் காசிரிய னாகப் பகராயோ. (80)

வேறு.

பவமாகிய பாசத்தளைப் பற்றற்றவ னுயு
மவமாகிய வினையாவையு மறவோட்டின னுயுஞ்
சிவமாகிய மனமோடுனைச் சிந்தித்திட வருளா
யுவமானமற் றிலையாம்பர வோங்கற்பெரி யோனே. (81)

பெரியோனென வுலகோருனைப் பேட்போடுரை செய்வா
ரரியோனென விமையோருனை யன்பாய்ப்புகழ் கிற்பார்

தெரியேனழை செயற்கோர்பெயர் சேவற்கொடி சேயே
கரியோனரு மருகாபரங் குன்றேயமர் கண்ணே. (82)

கண்ணேயரு மணியேயருட் கடலேமனக் கோயி
லுண்ணேரமர் சுடரேயிரு ளோட்டுங்கதி ரோனே
பண்ணேரமை மொழிவள்ளியன் பாகாபரங் குன்றத்
தண்ணேயெனை யாண்டேயடி யமரற்கருள் புரியே. (83)

புரியாயிரம் பாரேயுற வவையாவையும் போக்கிக்
கிரியாளுத லென்னேவுயர் தாய்தாதையின் கிளைக்கே
யுரியானென வெணியோவதி லுயர்வாயமை வுற்றாய்
கரியானன னிளையாபரங் கவின்மாமலைக் கந்தா. (84)

தாதாவெனப் புல்லோர்களை மிகவேபுகழ் சாற்றி
நீதாவெனக் கேதேனுமென் றிரந்தேகர நீட்டிப்
போதாவினை மறந்தேபல பொழுதேகழித் தேஞ
ஞதாபரங் குன்றாவெனை நலியாவகை காவாய். (85)

காத்தேயருள் புரிவாரெனக் கடையேன்பல தெய்வம்
பார்த்தேயவர் புகழேசொலிப் பரிந்தேனில வங்காய்
காத்தேயுறுங் கிளிக்காங்கதி கண்டேனவர் சேர்க்கை
நீத்தேனுனை யடைந்தேனரு ணிதாபரங் குன்றா. (86)

குனியார்வரைச் சிலையான்மகிழ் குமராநதி மைந்தா
பனியார்முகி லுறைமாமுடிப் பரங்குன்றமர் கந்தா
தனியார்வழி நின்றோர்க்கொரு சரியாந்துணை நேர்ந்தென்
இனியானென வெனக்காயினை யாரேயெனை யொப்பார். (87)

பாரேயொரு கொடியானது பகலாலதி வாடும்
நேரேயென வடியேன்வினை நெறுக்கான்மிக நொந்தேன்
காரேயென வருண்மாமழை சொரிந்தேயெனைக் காவாய்
சீரேயெழு நல்லோருறை பரங்குன்றமர் செல்வா. (88)

வாமாவுயர் கடமாமிசை வருவோர்தய வெற்குத்
தாமாவளிப் பவராயினுந் தமியேனது வேண்டே
னீமானவ னெனவேயுனை நெடிதாய்விழுந் தேத்தி
யாமாறருள் கேட்பேன்பர வசலத்தமர் வேலா. (89

வேண்டார்புர மெரித்தோன்றரு வீராவடி வேலா
தூண்டாமணி விளக்கேபரஞ் சோதிப்பரங் குன்றூ
தீண்டாவினை யேனுக்கடிச் செந்தாமரை தந்தாற்
பூண்டானெனச் சிரம்பூண்டுனைப் போற்றித்திரி வேனால். ()

---

வேறு.

நால்வாய் முகத்தான் பின்வந்த
ஞான குருவே நாயடியேன்
போல்வா ருலகிற் பிறருண்டோ
பொல்லா வினைகள் பலவுடையேன்
சேல்வா புவரி யதில்வீழ்ந்த
சிறுபுன் றுரும்பா யுழன்றெய்த்தேன்
பால்வாய் கமழும் பரங்கிரிவாழ்
பரனே கவலை தீர்த்தருளே. (91)

தகவா ரறிஞ ருளக்கோயிற்
  றலத்தும் தமிழின் றுறையிடத்து
நகமாந் தடத்து முறைவோனே
  நாகர் சேனை யதிபோனே
முகநான் குடையான் முதலானோர்
  முடிக ளணிந்த கழற்காலா
மகமே யுதித்த தகருதைத்தாய்
  வந்தென் வினைதீர் பரங்கிரியா. (92)

ஆழி நீரி லொருதிவலை
  யாரு மெடுத்தாற் குறைவுண்டோ
வேழை நீகொள் ளெனமகிழ்ந்தே
  யினிய நின்ற னருளாழித்
தாழி நின்று மோர்திவலை
  தமியேற் களிக்கிற் குறைவுண்டோ
காழி வந்த சிவக்கொழுந்தே
  கந்த கிரிவாழ் காங்கேயா. (93)

கேட்டுக் கேட்டு நின்பெருமை
  கீழோ னதனு லறியகில்லேன்
மேட்டுக் கிறைத்த நீர்போல
  வீணே யன்றி நன்மையிலை
யாட்டுக் காலோ னகமகிழு
  மருமைச் சுதனே நின்னடியார்
கூட்டுக் கொளச்செய் பரமாகுங்
  குன்றம் வாழுங் குகவேளே. (94)

வேளே தாங்கு மைங்கணைகள்
 வெய்ய காலன் கடும்பாசங்
கோளே செய்யு மிடையூறு
 கோடி கோடி யாமெனினும்
வேளே கந்த கிரிமேவும்
 வேலா நின்ற னருளிருந்தாற்
தூளே பட்டுச் சிதைத்தொழிக்குஞ்
 சூரா ளுகத் தடையுண்டோ. (95)

தளையுந் தொடையு மணிவகுப்புஞ்
 சந்தச் சொல்லும் பொருணயமும்
விளையும் படியாய்க் கவியுரைக்கும்
 விறலொன் றில்லா வெள்ளறிவேன்
சுளையுஞ் சக்கை யும்போலத்
 தொடுத்துச் சொன்னே னதிற்சக்கை
களையஞ் சுளைகொள் பரங்கிரிவாழ்
 கந்தா கடப்பத் தாரோனே. (96)

தாரே னென்று மற்றவர்க்குத்
 தந்தாற் கொள்வேன் றெரட்டிக்கு
நேரே யுள்ளே னின்னடியை
 நினைந்து வாழ்த்தைக் கொடுத்தறிய
ஞேரே னுன்னை யொருபோது
 முதவு மருளைக் கொளவுள்ளேன்
பாரே களிக்க வந்துதித்த
 பரங்குன் றத்தா வளித்தருளே. (97)

அளிகள் பாடும் பொழில்சூழ்ந்த
வணியார் பரங்குன் றரசேநின்
னளினப் பாத மலரிடத்தே
நறுந்தே னருந்தும் வண்டாகிக்
களியி னண்ண வருளாயோ
கனகன் மார்பு கிழித்தெறிந்து
விளியு மகனைக் காத்தளித்த
விண்டு மகிழு மருகோனே. (98)

மருங்கு லொடியப் புடைத்தெழுந்த
வண்ணத் தனத்துச் சுரயானைக்
கருங்கண் ணமைப்பை வேலமையுங்
கவினே டொத்துப் பார்த்திடற்கோ
விருங்கை வேலைத் தாங்கியுளா
பெழிலார் மாதர் குழனோக்கி
நெருங்கு முகிலாய் மயிலாடு
நீண்ட கந்த மலைக்குகனே. (99)

குண்டை யூர்ந்தான் புத்திரனைக்
கோழிக் கொடிகொள் கொற்றவனைப்
பண்டை யூராம் பரங்கிரியைப்
பரிவா யாளும் பார்த்திபனை
யிண்டை மாலை சாத்திபன்பா
யேத்திப் பாடுந் தூயோரே
தண்டை யொலிக்கு மலர்ப்பாதந்
தங்கும் வாழித் திரு (100)

பரங்கிரிப்பதிற்றுப் பத்தந்தாதி முற்றிற்று.

பமஸ்து.

223173